ஜனசக்தி

தின இதழ்

ஆசிரியர்: ப. ஜீவானந்தம்.

பக்கம் 4 | விலை 1 அணா

மலர் 13] சென்னை 4-9-56, துன்முகி ஆவணி—செவ்வாய் 20 (வெளியூர் 5-9-56 ஆவணி—புதன் 21) [இதழ் 21

உறவு சீர்பட்டது

பெல்கிரேட், செப். 2—

யூகோஸ்லாவியா, போலந்து கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே 1948-ல் முறிந்த உறவு மீண்டும் சீர்படுத்தப்பட்டு விட்டது, என்று பெல்கிரேடிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் குப்பகர்ணர்கள்!

சென்னை, செப். 3—

இரவு நேரங்களில் பிளாட்பாரங்களில் அயர்ந்து தூங்கும் பிரயாணிகளை, ரயில்கள் வந்ததும் எழுப்ப, உரக்க அறிவிப்புகள் செய்யும் திட்டமொன்று ரயில்வே அதிகாரிகளின் ஆலோசனையிலுள்ளது, என்று தெரிகிறது.

நெய்வேலியில் அடங்காப் பிடாரி!

சர்க்கார் வற்புறுத்தியும் சோவியத் யந்திரம் வாங்க மறுப்பு

நெய்வேலி திட்டம் கல்லுப் பிள்ளையாராக யிருக்கும் ரகசியம்

(நமது டெல்லி நிருபர்)

புதுடெல்லி, செப். 2—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டவேலைகளை நிர்வகிக்கும் அதிகாரியின் அடங்காப்பிடாரித்தனமான போக்குகளால் திட்டம் துரிதமாக முன்னேறாமல் தேங்கி நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதை ஊர்ஜிதம் செய்யும் பல தகவல்கள் நமது டெல்லி நிருபருக்குக் கிடைத்துள்ளது.

'இயற்கையின் அடங்காப் பிடாரிதனம் தான்' திட்டம் நிறைவேறுதிருப்பதற்குக் காரணம் என்று நெய்வேலி திட்டத்தின் சூப்பிரெண்டும் டைரெக்டருமான அந்த அதிகாரி இதுவரை கூறிவந்தாரல்லவா?

இன்று பழுப்பு நிலக்கரியைக் கண்ணால் கண்டாகிவிட்டது. ஆனால் அதை எடுக்க முடியாததற்குக் காரணம் என்ன? அதற்குத் தகுந்த நிலக்கரி யந்திரம் ரஷ்யாவில் கிடைக்கிறது. ரஷ்ய சர்க்கார் இந்த யந்திரத்தை தருவதாக சொல்லியுள்ளதாகவும் அதை வாங்கும்படி இந்திய சர்க்காரின் அன்னிய விவகார மந்திரி அவரைக் கேட்டுக் கொண்டதாகவும் தெரிகிறது.

ஆனால் மேற்படி நெய்வேலி அதிகாரிக்கு இது பிடிக்கவில்லையாம். இவர் தொடர்பு கொண்டுள்ள ஒரு பிரிட்டிஷ் கம்பெனியிடமிருந்து வாங்கத்தான் இவருக்கு விருப்பமாம். எனவே அந்தப் பிரிட்டிஷ் கம்பெனியிடம் இந்திய சர்க்கார் சோவியத் யந்திரத்தை வாங்கும்படி கட்டாயப்படுத்துவதாக சொல்லுகிறாராம். எப்படி இருக்கிறது! அன்னிய முதலாளி ஒரு

(2-ம் பக்கம் பார்க்க)

சர்க்கார் கணக்கில் 1 லட்சம் ஊழல்கள்

மந்திரியின் வழவழா சமாதானம்

புது டெல்லி, செப். 3—

இந்திய சர்க்காரின் கணக்கை ஆடிட் ஜெனரல் பரிசோதனை செய்ததில், 1949லிருந்து 1956 வரை இன்னும் தீர்க்கப்படாமல் 1 லட்சம் ஆட்சேபணைகள் இருக்கிறதென்ற விவரத்தை இந்திய சர்க்கார் வருமான மந்திரி எம். சி. ஷா, டாக்டர் ரகுவீர் சிங் கேட்ட கேள்வி ஒன்றுக்கு இன்று ராஜாங்கசபையில் பதிலளித்துப் பேசுகையில் வெளியிட்டார்.

இந்த ஆட்சேபணை சம்பந்தப்பட்ட சந்தேகங்களை நிவர்த்திக்கவும், இதுசம்பந்தமாக அவசியமான முறைகளைச் கையாளவும் சர்க்கார் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துவருவதாக மந்திரி கூறினர்.

தொழிற்சங்கங்களையும் கலந்துகொள்ள பூபேஷ் கோரிக்கை

கல்கத்தா, செப். 2—

தோழர் பூபேஷ் குப்தா (ராஜ்ய சபையில் கம்யூனிஸ்ட் தலைவர்) இன்று விடுத்துள்ள ஒரு அறிக்கையில் மஹபூப் நகர் விபத்து சம்பந்தமாக பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும், அதில் பார்லிமெண்டு அங்கத்தினர்களும், பிரஸ்தாப ரயில்வே சம்பந்தப்பட்ட ரயில் தொழிலாளர் சங்கங்களும் கலந்து கொள்ள வசதி செய்ய வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

பார்லிமெண்டிலுள்ள கம்யூனிஸ்ட் மெம்பர்கள் சார்பில், ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தார்.

'2 வருஷங்களுக்கு முன்னால் இதே ஹைதராபாத்தில் வாரங்கலுக்கு அருகில் ஜங்கம் என்ற விடத்தில் பயங்கர ரயில் விபத்து ஏற்பட்டது. அப்பொழுது தீவிரப் பரிசிலனையும் விசாரணையும் தேவை என்று நாங்கள் வற்புறுத்தினோம். சர்க்கார் காலங்கடத்திற்று. இப்பொழுது மீண்டும் ஒரு கோர விபத்து 112 உயிர்களைக் காவு கொண்டு விட்டது. இது ரயில்வே நிர்வாகத்தின் [illegible]லாகாத்தனத்தையும் அசட்டை மனப்பான்மையையுமே காட்டுகிறது. ஆகவே சரியான விசாரணை வேண்டும்" என்று தோழர் பூபேஷ் அவ்வறிக்கையில் கோரியுள்ளார்.

150 கோடி மக்களையும் எதிர்க்கத் தயாரா?

எகிப்தின் அறைகூவல்

நாஸர்-மென்சிஸ் சம்பாஷணை துவக்கம்

கெய்ரோ, செப். 3—

மென்ஸிஸைத் தலைவராகக் கொண்ட ஐவர் தூது கோஷ்டிக்கும் எகிப்திய ஜனாதிபதி கர்னல் நாஸருக்குமிடையே இன்று சூயஸ் பிரச்னை சம்பந்தமாக சம்பாஷணைகள் துவங்கின.

இந்த சம்பாஷணைகள் 35 நிமிடங்கள் நீடித்திருந்தன. ஏறக்குறைய ஏழு தினங்கள் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு இன்றைய சந்திப்பு பூர்வாங்கமாக இருந்தது.

ஐவர் தூது கோஷ்டித் தலைவர் மென்ஸிஸ் முதலில் லண்டன் மகாநாட்டு யோசனைகளை நாஸரிடம் சமர்ப்பித்தார்.

இன்றையக் கூட்டம் முடிவடைந்ததும், "பேச்சு வார்த்தைகள் சுமுகமாகவும் நேசபாவமாக"வும் இருந்ததாக மென்ஸிஸ் தெரிவித்தார்.

எகிப்தின்மீது தாக்குதல் நடைபெற்றால், அதை எதிர்த்து முறியடிப்பதற்கான சகல ராணுவ ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டன என்று எகிப்திய யுத்த மந்திரியும், பிரதம சேனாதிபதியுமான ஹக்கீம் அமர் இன்று தெரிவித்தார்.

எத்தகைய நிலைமையையும் சமாளிக்கும் வகையில் எகிப்திய ராணுவம் பரிபூரண ஆயுத சன்னத்தத்தோடு, திறமையாகப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறதுஎன்றும் அவர் கூறினர்.

ஏராளமான வழிகாட்டிகள்!

பாரிஸ், செப். 3—

எகிப்தில் வழிகாட்டிகளாக(பய

(2-ம் பக்கம் பார்க்க)

விபத்துக்கு அதிகாரிகளின் அசிரத்தையே காரணம்

லோக சபையில் ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

ரயில்வே நிர்வாகத்தின்மீது தோழர் விட்டல் குற்றச்சாட்டு

புதுடில்லி, செப். 3—

இன்று லோக சபையில், மஹபூப் நகர் ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகத்தான் அங்கத்தினர்கள் எழுந்து 2 நிமிஷம் மௌனம் அனுஷ்டித்தனர்.

எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மஹா தேவரெட்டா, குருபாதசாமி, விட்டல்ராவ் ஆகிய மூவர், இந்த விபத்து சம்பந்தமாகக் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை சபாநாயகர் நிராகரித்தார்.

விபத்தைப்பற்றிப் பூரா விபரங்களும் கிடைத்தபின் விவாதம் வைத்துக்கொள்ளலாம் என்று கூறிவிட்டார்.

தோழர் விட்டல்ராவ், பேசுகையில், "குறிப்பிட்ட இடத்தில் ரயில் பாதை அபாயகரமான நிலையிலிருக்கிறது என்று முன்கூட்டியே ரயில்வே அதிகாரிகளுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. ஒரு ட்ரெயின் நிறுத்தப்படவும் செய்தது. அப்படியிருந்தும் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. ஆகவே ரயில்வே அதிகாரிகளின் அசிரத்தையே இதற்குக் காரணம். ரயில்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் உயிரைப் பாதுகாக்க வேண்டியது ரயில்வே நிர்வாகத்தின் கடமை. ஆகவே இதுபற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டும்" என்றார்.

ஐ. என். டி. யு. ஸி.

சர்க்காரின் செல்லப் பிள்ளையா?

ஓரவஞ்சனை தொழில் கொள்கைக்கு ஹிந்து மஸ்தூர் சபாவின் கண்டனம்

புதுடில்லி, செப். 3—

இந்த நாட்டுத் தொழிலாளருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். நாட்டின் புனர் நிர்மாணத்தில் அவர்கள் தமக்குரிய பங்கைவகிக்க வேண்டும். அவர்களது நல்வுரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். இவற்றை எல்லாம் சாதனையாக்கத் தொழிற் சங்க ஐக்கியம் இன்றியமையாதது என்று நேற்று இங்கு நடைபெற்ற ஹிந்த் மஸ்தூர் சபையின் அகில இந்தியக் கவுன்சில் அறைகூவல் விடுத்தது.

தேசிய ரீதியாக ஒரு குறைந்தபட்ச சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதற்குக் குறைவாக எங்கும் எவரும் ஊதியம் கொடுக்கக் கூடாது. இதை முதல் நடவடிக்கையாக சர்க்கார்எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இக்கமிட்டி விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது.

சர்க்காரின் தொழில் கொள்கையைக் கண்டித்த இவ்வறிக்கை சர்க்கார் ஐ. என். டி. யூ. சி.க்கு அளவுக்கு மீறிய சலுகை அளித்துப் பாரபட்சம் காட்டுகிறது எனவும், வேலை நிறுத்தங்களைச் சட்ட விரோதமாக்குவதன் மூலம் நியாயமான போராட்டங்களை சட்டபூர்வமும் சமாதானமுமான போராட்டங்களை தடை செய்கின்றது எனவும் அறிக்கை குறிப்பிட்டது. அரசாங்க சிப்பந்திகள் விஷயத்தில் அவர்களுக்குரிய தொழிற் சங்க பிரஜா உரிமைகளை ஒடுக்கி மறுக்க முயலும் சர்க்கார் போக்கை ஆட்சேபித்தது.

வேலையின் பலனைப் பார்த்து ஊதியம் கொடுக்கும்முறை தொழிலாளர்களைப் பாதிக்கும் எனவும், நியாயக்கூலி உத்தரவாதமாகக் கிடைக்க உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிக்கை வலியுறுத்தியது.

நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு பற்றுவது என்பது வரவேற்கத் தக்கதெனவும் ஆனால் அதன் யதார்த்த நிலைமை நடைமுறையில் தான் காணமுடியும் என்றும் அறிக்கை குறிப்பிட்டது.

சௌ என்-லாய் இந்தியாவில் 15 நாள்

புதுடில்லி, செப். 3—

மக்கள் சீனக் குடியரசின் பிரதம மந்திரி சௌ என்-லாய் இவ்வருஷம் டிசம்பர் மாதத்தில் இந்தியா விஜயம் செய்வாரென்றும், 15 நாட்கள் இங்கு இருப்பாரென்றும் தெரிகிறது.

டிசம்பர் முதல் வாரத்தில் பர்மாவுக்குச் சென்றுவிட்டு பிறகு இந்தியாவுக்கு வருவார்.

ஜவுளி வரிக்கு லோக சபையில் எதிர்ப்பு

எதிர்க் கட்சிகள் முழக்கம்

புதுடெல்லி, செப். 3—

மில் ஜவுளிகள் மீது எக்சைஸ் வரி விதிக்கும் மசோதா இன்று லோக சபையின் விவாதத்துக்கு வந்தது. சபையில் எதிர்க்கட்சியாளர்களும், அநேக காங்கிரஸ் மெம்பர்களும் இதைக் கடுமையாக எதிர்த்தார்கள்.

நிதி மந்திரி ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி இந்த மசோதாவைப் பிரேரித்துப் பேசுகையில், "இந்த வரியின் ஒரு பகுதிகூட மக்கள் தலையில் விழாது என்று உறுதியாகக் கூற மாட்டேன். விலைவாசிகள் கீழே இறங்கவும், அமித லாபங்களைக் குறைக்கவும் இந்த வரி ரொம்ப ரொம்ப அவசியம்" என்றார்.

'இல்லை, இது கடைசியாக மக்கள் தலையிலேயே விழும் வரிச்

(2-ம் பக்கம் பார்க்க)

ஜனசக்தி

தினஇதழ்

ஆசிரியர்: ப. ஜீவானந்தம்

ஆசிரியர் குழு :

எம். ஆர். வெங்கட்ராமன், பி. ராமமூர்த்தி, எஸ். ராமகிருஷ்ணன்,

கே. முத்தையா நிர்வாகஆசிரியர்.

செவ்வாய் 4—9—56

கடிவாளம் யார் கையில்?

கிட்டத்தட்ட 1,250 கோடி ரூபாய் வர்த்தகம், இந்தியாவில் இன்ஷூரன்ஸ் தொழிலில் சிக்கிக் கிடக்கிறது இந்தத் தொழிலில் போடப்பட்டுள்ள பணம் 380 கோடி ரூபாய்.

இத்தகைய பெருந்தொழில் இம்மாதம் முதல்தேதியிலிருந்து தேசீய மயமாக்கப் பட்டிருக்கிறது.

தேசீயமயமாக்க சர்க்கார் முடிவுகட்டியதும், அந்த முடிவை மக்கள் வாயார மனமார வரவேற்ருர்கள். லாபவேட்டையாடும் தனிநபர் கையிலிருந்து தேசீயநல நோக்கங்கொண்ட சர்க்கார் கையில், இந்தத் தொழிலின் லகான் வருகிறதென்ற எண்ணத்தால்தான் அத்தகைய வரவேற்பு. இனி இந்தத் தொழிலில் குவிந்து கிடக்கும் பணம் சர்க்கார் ஆதிக்கத்தில், தேச அபிவிருத்திக்கே பிரதானமாக உதவுபடியாகுமென்று எதிர்[illegible]தால் [illegible] அந்த வரவேற்பு.

மக்கள் இவ்வாறு எதிர்பார்த்து, வரவேற்ற ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது தெரியுமா?

சர்க்காரின் ஒரு இலாகா மாதிரியும் இல்லாமல், மந்திரி சபையும் தலையிடமுடியாமல், சுயேச்சைத்தன்மை கொண்டதாக, சட்டப்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாதிரி அமைத்துவிட்டு, தேசீய மயமாக்குவதில் நம்பிக்கை இல்லாதவர்களை அதன் நிர்வாகத்தில் வைத்தால், சர்க்காரின் நன்னோக்கம் ஈடேறு[illegible] ஒருக்காலும் ஈடேறாது.

இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனை நிர்வகிக்க ஒரு போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த போர்டில் 15 பேர் அங்கம் வகிக்கிருர்கள். இவர்களில் 5 பேர் மு[illegible] நிர்வாகிகள்.

இவர்களில் கே. ஆர். சீனிவாசன், என். எஸ். வைத்தியநாதன், கஸ்தூர் ஆகிய மூவரும் பழைய ஓரியண்டல் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் பெருந்தலைகளாயிருந்தவர்கள். மற்ற இருவர்களில் ஒருவர் இராஜகோபாலன்; மற்றவர் ஓரா. இராஜகோபாலன் இன்று மத்ய சர்க்காரைச் சார்ந்தவராயினும் ஒரு மாஜி ஓரியண்டல் ஓரா நியூ இந்தியா கம்பெனியைச் சேர்ந்தவர்.

ஓரியண்டலும், நியூ இந்தியாவும் மிகப்பெரிய இன்ஷூரன்ஸ் கம்பெனிகளாயிருந்தவை.

ஏற்கனவே சுமார் 40 சதமான இன்ஷூரன்ஸ் பணம் தனியார் துறையில் மூதலீடு செய்யப்படும் என்று தேஷ்முக் உத்தரவாதம் அளித்திருக்கிருர்

இந்த தனியார்துறை முதலீடு யாருக்குக் கிடைக்கும்? இந்திய ஏகபோகப் பெருமுதலாளிகளுக்குத்தான் கிடைக்கும். 'போர்டில்' நிர்வாகிகளாக இருந்து, கொள்கையை உருவாக்குகிறவர்கள் இந்த ஏகபோகப் பெருமுதலாளிகளின் ஆட்கள் தானே?

ஆகவே 'தேசீயமாக்குதல் என்ற நல்ல கொள்கையின் பெயரால் பெரு முதலாளிகள் ஆதாயம் அடிக்க, சட்டப்படி வழிதிறந்துவிடுகிறது இந்த அமைப்பு இது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதன்றி வேறென்றுமல்ல.

இன்று போர்டிலிருக்கிற ஆள்கள் அப்படியே இருந்தால், இன்ஷூரன்ஸ் தொழிலை சர்க்கார் தேசீயமயமாக்கிய நன்னோக்கம் ஒருநாளும் நிறைவேருது.

எனவே, தேசீயமயமாக்குவதில் நம்பிக்கைகொண்டவர்களை 'போர்டு' அங்கத்தினர்களாக நியமிக்கவேண்டும். தனியார் துறையில் எவ்வளவு முதலீடு செய்வதென்று முன்னுடியே நிர்ணயித்துவிடக்கூடாது. இடம், பொருள், ஏவலைக் கணக்கிலெடுத்து, சர்க்கார் அவ்வப்பொழுது நிர்ணயிக்கவேண்டும். இத்தகைய அம்சங்கள் சட்டத்தில் இடம் பெற்ருல்தான், தேசீயமயமாக்கியதற்கு அர்த்தமுண்டு.

நோயும் மருந்தும்

காமதேனுவாக இருந்ததேயிலைத் தொழில் இன்று கறவாப் பசு ஆகிவிடுமோ! என்ற கவலையால் தோட்ட முதலாளிகள் கதறிக் கண்ணீர் வடிக்கிருர்கள். அண்மையில் நடைபெற்ற தென்னிந்தியத் தோட்ட முதலாளிகள் சங்கத்தின் (உபாசி) அறுபத்துமூன்ருவது ஆண்டு விழாவின்பொழுது இச்சங்கத் தலைவர் கில்கோர் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் "எங்களைக் காத்து ரட்சியுங்கள்! கருணை காட்டுங்கள்" என்று சர்க்காரிடமும் தொழிற்சங்கங்களிடமும் மன்ருடிக் கேட்டுக் கொண்டிருக்கிருர். பாதுகாப்பில்லாவிடில் படுகுழியில் விழுந்துவிடுவோம் என்று பதறுகிருர் சென்னை ராஜ்ய தோட்ட முதலாளிகள் சங்கத் தலைவர் கோத்தாரி. நொடித்துப்போன சமயத்தில் போனஸ் கேட்கிறீர்களே! தோட்டத் தொழிலாளர் [illegible] கிறீர்களே! என்று அலறுகிருர்.

இந்த 'லக்ஷ்மி புத்திரர்'கள் இப்படி மூக்காடிட்டு முகாரி பாடக் காரணமென்ன? தேயிலை விலை குறைந்துவிட்டது, மார்க்கெட் சுருங்கி வருகிறது, உற்பத்திச் செலவு அதிகரித்து விட்டது, வரிச் சுமை தாங்க முடியவில்லை என்பதே இவர்களது வாதம். 1955 ஜனவரி மாதத்தில் ரூ. 3-14-0க்கு விற்ற ஒரு ராத்தல் தேயிலை இப்பொழுது ரூ. 2-0-0க்கு விற்கிறதே என்று கூக்குரலிடுகின்றனர்.

இந்த நிலை ஏற்படக் காரணமென்ன? தேயிலைத் தொழிலில் 64.2 சதவிகிதம், மூன்றில் இரண்டு பங்கிற்குமேல் அந்நியக் கம்பெனிகளுக்குச் சொந்தம். தொழிலாளர் உழைப்பை ஈவிரக்கமின்றிச் சுரண்டி உறிஞ்சுவதுபோல நிலத்தின் சாரத்தையும் உறிஞ்சி வருகிருர்கள் அவர்கள். மலைப் பகுதிகளை வெறும் பொட்டல் காடாக்கி வருகிருர்கள். அதோடு இங்கிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் தேயிலையில் கணிசமான பகுதியை, சுமார் $1\frac{1}{2}$ கோடி ராத்தல்களுக்கு மேல் திருப்பி வேறு நாடுகளுக்கு அனுப்பி விற்கிருர்கள்.

சோஷலிஸ்ட் நாடுகளில் மார்க்கெட் ஏற்படுத்திக்கொள்வது புதிய தேயிலைப் பயிர்களை வளர்த்து தொழிலுக்குப் புத்துயிர் கொடுப்பது இவையே இந்த நோய்க்கு மருந்து. இதைச் செய்யாமல் நோயாக இருக்கும்போது பால் கேட்கிருனே! என்று தொழிலாளர் நலவுரிமைகளைப் பறிமுதல் செய்ய நினைப்பது புத்திசாலித்தனமாகாது. கொழுத்த லாபமடித்தபோது கொழுந்து பறித்தவர்களையும் கவாத்து வெட்டியவர்களையும் கவனித்து இந்த தர்மகர்த்தாக்கள் கருணுமூர்த்திகள் ஏதாவது ஒரு சலுகையாவது அளித்ததுண்டா? இல்லை இல்லை!

தேயிலைத் தொழிலில் விதேசி ஆதிக்கம் அகலவேண்டும். மார்க்கெட்டை நிரந்தரப்படுத்த வேண்டும். உள்நாட்டிலும் அதிகமான தேயிலையை நம் மக்கள் வாங்குமளவுக்கு பொதுவான வாழ்க்கைத்தரம் அதிகரிக்க வேண்டும். இதைத்தவிர வேறு குறுக்கு வழி கிடையாது.

சென்னை ராஜ்யக் கடன்

சென்னை, செப். 3—

அபிவிருத்திக் கடன் என்ற வகையில் சென்னை சர்க்கார் கோரிய ரூ. $12\frac{1}{2}$ கோடி கடன் தொகை ஒரே நாளில் ரூ. 16 கோடி திரட்டப்பட்டிருக்கிறது.

150 கோடி மக்களையும் எதிர்க்க — — —

(முதல் பக்கத் தொடர்ச்சி)

லெட்ஸ்) சேவை செய்வதற்கு பல்வேறு தேசங்களிலிருந்து ஏராளமான பேர் மனுச்செய்துக் கொண்டிருப்பதாக பாரிஸிலுள்ள எகிப்திய ஸ்தானிகராலயம் இன்று அறிவித்தது. ரஷ்யாவிலிருந்து 100 பேர்களும் ஸ்பெயினிலிருந்து 50 பேர்களும் மற்றும் வேறு பல நாடுகளிலிருந்து பல பேர்களும் வழிகாட்டிகளாகப் பணியாற்ற முன்வந்துள்ளதாக எகிப்திய ஸ்தானிக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேரு செல்வாரா

கெய்ரோ, செப். 3—

தற்போது நடைபெற்று வரும் சம்பாஷணைகள் கவலைபளிக்கக் கூடிய வகையில் மாறுமானல், இரு தரப்பாரிடையேயும் ஒரு சுமூகமான உடன்பாடு காணுவதற்காக இந்திய பிரதமர் நேரு இங்கு அவசரமாக வரலாம் என்று கெய்ரோ அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

ரஷ்யா மீது ஆத்திரம்

பாரிஸ், செப். 3—

"ரஷ்யா மட்டும் எகிப்தை ஆதரிக்காது இருக்குமானல், 18 தேசங்களின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாஸர் அடிபணிந்தே தீருவார்" என்று பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி பினே ஒரு விவசாயப் பொருட்காட்சியில் பேசும்போது குறிப்பிட்டார்,

பிரிட்டிஷ், பிரெஞ்சு உயிர்களையும், உடமைகளையும் பாதுகாப்பதற்குத்தான் முன்னெச்சரிக்கையாக ராணுவ முஸ்திபுகள் செய்யப்பட்டு வருவதாக அவர் சமாதானம் கூறினர்.

ஜவுளி வரிக்கு லோக சபையில்...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சுமையாகும்' என்று எதிர்க் கட்சியினர் காங்கிரஸ் மெம்பர்களும் கூட, கடுமையாக எதிர்த்தார்கள்.

எதிர்ப்பு உக்ரமாகவே, போலீஸ் மந்திரி ஸ்ரீ பந்த் இடைமறித்து, "இது வரி விதிப்பு மசோதா அல்ல. மக்கள் அதிக துணிகளை வாங்குவதால், கிராக்கி அதிகமாகி துணி விலைகள் ஏறுகின்றன. அதிக துணிகளை வாங்குவதைக் குறைக்கவே இந்த ஏற்பாடு என்ருர்.

அசோக்மேதா

பிரஜா—சோஷலிஸ்ட் தலைவர் ஸ்ரீ அசோக்மேதா கண்டித்துப் பேசுகையில், "இந்த வரி உயர்வு மசோதாகொண்டுவரப்படும் முன்னதாகவே பம்பாயிலும் நாகப்பூரிலுமுள்ள மில் முதலாளிகளுக்கும் பெரும் வியாபாரிகளுக்கும் விஷயம் தெரிந்துவிட்டது. இந்த ஊழல் மறுபடியும் நடந்திருப்பது கண்டு நான் திடுக்கிட்டேன். இந்த லீக்கேஜிலிருந்து சர்க்காருடைய யோக்கியதை அம்பலமாகிறது. இந்த வரி போடுவதன் காரணத்தை நிதி மந்திரியால் விவரிக்க முடியவில்லை. இது ஜவுளி வாங்கும் பொதுமக்களையே பாதிக்கும். உண்மையிலேயே முதலாளிகளின் உபரி லாபத்தைக் கட்டுப்படுத்த சர்க்கார் விரும்பினல், அதற்கு வழி, உபரி லாபத்தின் மீதும், மூலதன லாபத்தின் மீதும் வரி விதிக்கவேண்டும். இவர்கள் மீது வரி விதிக்காமல், மக்கள் மீது புதிய வரிகளைச் சுமத்த எந்தவித யோக்கியதையும் இந்த சர்க்காருக்குக் கிடையாது" என்ருர்.

ஸ்ரீ ஜி. எல். பன்சாலி (காங்)யும் எதிர்த்தார்.

'இது பதுக்கலில், கொண்டுவிடும், மக்களையே தாக்கும்' என்ருர் ஆர். ஆர். மொராக்கா என்ற காங்கிரஸ் அங்கத்தினர்.

ஹிரேன் முக்கர்ஜி

பார்லிமெண்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உபதலைவர் புரபஸர் ஹிரேன் முக்கர்ஜி புதிய வரியைக் கடுமையாகத் தாக்கினர். அவர் பேசுகையில், "பிஸ்மார்க் கடைப்பிடித்த உதையும் முத்தமும் என்ற கொள்கையை நிதி மந்திரியும் கடைப் பிடிக்கிருர். விலைக்கட்டுப்பாடு செய்ய எந்த ஏற்பாடும் இல்லை. அதனல், மக்கள்மீதே இந்தச் சுமையை மில் முதலாளிகள் தள்ளுவார்கள். தீபாவளி, சங்கராந்தி ஆகிய பண்டிகை காலங்களில் ஏழை மக்கள் மீது இந்தப் பேரிடி விழுந்திருக்கிறது.

லாபத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று உண்மையிலேயே, நேரடி வரிகளை விதிக்க வேண்டும்.

பி. சோ. அங்கத்தினர் ஸ்ரீ குருபாதசாமியும் முதலாளிகள்மீது வரிவிதிக்க வேண்டுமென்ருர்.

மகா சபா

ஹிந்து மகா சபை அங்கத்தினர் ஸ்ரீ வி. ஜி. தேஷ்பாண்டே, 'இவ்வரி மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேலும் குறைக்கும்' என்ருர்.

காங்கிரஸ்

அஸாம் காங்கிரஸ் அங்கத்தினர். ஸ்ரீ கே. பி. திருபாதி பேசுகையில், 'இது முதலாளிகளின் லாபத்தில் கை வைக்காது. மக்களை மேலும் தரித்திரர்களாக்கும்' என்ருர்.

நடுத்தர, மோட்டா ஜவுளி மீதாவது வரி விதிக்கக்கூடாது என்ருர் பிகார் காங்கிரஸ் வாதி சுஷ்மா சென். டி. டி. கே. ஒரு ஈவிரக்கமற்ற வரிப்புலி, என்ருர் பிகார் காங்கிரஸ்வாதி தார்கேஷ்வாரி.

மற்றும், பகவத்ஜா, பி. டி. தாணுப்பிள்ளை, அம்முசுவாமிநாதன், சி. பி. மாத்தன் ஆகிய காங்கிரஸ்வாதிகளும், எஸ். எஸ். மோரே என்ற சுயேச்சையாளரும் எதிர்த்துப் பேசினர்கள்.

ரேணு சக்கரவர்த்தி

கம்யூனிஸ்ட் அங்கத்தினர் திருமதி ரேணு சக்கரவர்த்தி பேசுகையில் "இந்த வரி, மக்களின் முதுகில் பாயும் துப்பாக்கி ரவைகளாகும். வரியை ரத்து செய்யாவிட்டால், நடுத்தர மோட்டா ரகஜவுளி மீதாவது வரி விதிக்காமலிருக்க வேண்டுகிறேன்" என்ருர்.

கடைசியாக மசோதா ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

சென்னையில் எதிர்ப்பு

சென்னை, செப். 3—

ஏற்கெனவே மில் ஜவுளி விற்பனை வரி காரணமாக 10 சதவிகித விலை உயர்ந்துள்ளது. இப் புதிய வரியால் பெரிய அளவில் சென்னை ராஜ்ய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சென்னை ஜவுளி வியாபாரிகள் சங்கத் தலைவர் ஸ்ரீ. ரெங்கைய செட்டியார் தெரிவிக்கிருர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரிடம் நமது சர்க்கார் உத்திரவுகளைப்பற்றிப் பேசுகிருராம்!

இதுமட்டுமல்ல. இந்திய சர்க்காரிடம், சோவியத் யந்திரங்கள் இந்த நாட்டிற்கு புதிது எனவே அவைகளைத் தன் தலையின்மேல் சுமத்தப்பட்டால் அவைகளுக்குத் தான் பொறுப்பாக இருக்க முடியாது என்று ஆணவமாகப் பேசுகிருராம்.

இதில் வேடிக்கை என்னவென்ருல், இதே அதிகாரி இதுவரை வாங்கப்பட்ட பிரிட்டிஷ் யந்திரங்கள் திருப்திகரமாக இல்லை என்று கூறி இருக்கிருர்.

இப்படிக் கூறியவர் சோவியத்திலிருந்து யந்திரம் வாங்குவதைத் தவிர்ப்பதற்காகவும் பிரிட்டிஷ் முதலாளியின் தொடர்பு நீடிப்பதற்காகவும் அதே பிரிட்டிஷ் முதலாளியிடம் லாபமில்லாமல் தமது யந்திரத்தை விற்கும்படி ஆலோசனை கூறுகிருராம். இப்படி ஆர்டர் கொடுத்து பிரிட்டிஷ் யந்திரம் மிகவும் காலதாமதமாகி வந்தபோதிலும் நம் அதிகாரிக்கு கவலையில்லை போலும்.

இப்படிப்பட்ட ஆணவம்பிடித்த அதிகாரியின் போக்கால் திட்டம் துரிதமாக முன்னேருமல் கல்லுப் பிள்ளையாராக இருக்கிறதெனத் தெரிகிறது. இந்த நிலைமை நீடிக்க சர்க்கார் அனுமதிக்கப் போகிறதா?

தொழிற்கட்சித் தலைவர் கோரிக்கை

லீட்ஸ், செப். 2—

தற்போது செய்யப்பட்டுவரும் ராணுவ ஏற்பாடுகள் தற்காப்புக்கே தவிர எகிப்து மீது தாக்குதல் ஆரம்பிப்பதற்கு அல்ல என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் சந்தேகத்துக்கிடமின்றி பகிரங்கமாகத் தெரிவித்துவிட வேண்டுமென்று காமன்ஸ் சபை பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான கெய்ப்ஸ்கல் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் வற்புறுத்தினர்.

எகிப்தின் பின்னல் 150 கோடி மக்கள்

கெய்ரோ, செப். 2—

எகிப்துக்கு எதிராக மேலைநாடுகள் ஏதாவது நடவடிக்கைஎடுக்குமானல், ஆசியாவையும் ஆப்ரிக்காவையும் சேர்ந்த 150 கோடி மக்களின் பிரம்மாண்டமான எதிர்ப்பை அந்த மேற்கு தேசங்கள் சமாளிக்க வேண்டிருக்கும் என்று 'அல்கெ-மூரியா' பத்திரிகையின் ஆசிரியரும் முன்னுள் மந்திரியுமான கர்னல் சாதத் இன்று எச்சரித்தார். "எங்கள் பகுதியில் மேலை ஆதிக்கம் மலையேறிவிட்டது. ஆனல் இந்த உண்மையை பிரிட்டிஷ், பிரெஞ்சு தேசங்கள் ஏற்க மறுக்கின்றன" என்றும் அவர் கூறினர்.

நடக்க இருப்பவை

பொன்மலைத் தியாகிகள் தினம்: 5-9-56 மாலை 6-30 மணிக்கு பொன்மலை லேபர் யூனியன் திடலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் கே. அனந்த நம்பியாரும், மற்றும் பலரும் பேசுவர்.

சங்கரன் கோவில் தாலுகா சிவகிரியில் மக்கள் கலாமன்ற ஆண்டு விழாவும், உழவன் வில்லுப்பாட்டு அரங்கேற்றமும் 5-9-56 இரவு நடைபெறும். நெல்லை திரு. எஸ். ஷண்முகம், தி. க. சிவசங்கரன், சங்கரனர் ஆகியோர் பேசுவார்கள்.

சென்னை மார்க்கெட்

தங்கம் வெள்ளி

சென்னை, செப். 4—

சவரன்	68-0-0
தங்கம் ரெடி	104-2-0
மூலை தங்கம்	102-12-0
வெள்ளி 100 தோலா எடை	175-0-0
வெள்ளி 1 ரூபாய் எடை	1-12-6

மணிலாப்பயறு

531 ரா. கொண்ட பாரம் 1-க்கு விற்பனைவரி உள்பட புதிய சரக்கு உயர்ந்த ரகம்	175-0-0
சாதா	172-0-0

மணிலா எண்ணெய்

500 ரா. கொண்ட பாரம் 1-க்கு எக்ஸ்பெல்லர் ரெடி (மதராஸ்) கிடங்கு டெலிவரி 3% F. F. A. (மொத்த விலை ரெடி)	323-0-0
செப்டம்பர் இரண்டாவது வாரம்	320-0-0

விளக்கெண்ணெய்

500 ரா. கொண்ட பாரம் 1-க்கு (மதராஸ் கிடங்கு டெலிவரி) திருப்பத்தூர்	295-0-0
சேலம் "தாமரை" "அன்னம்" ($37\frac{1}{2}$ ரா. டின் உள்பட)	23-0-9

தேங்காய் எண்ணெய்

$7\frac{1}{2}$ ரா. கொண்ட டின் 1-க்கு (விற்பனை வரி தனி) கொல்லம் சரக்கு எம். எஸ். மார்க்	27-12-9
ராஜா மார்க்கு	27-0-9
அம்பு மார்க்கு	27-0-9

சர்க்கரை

(எக்ஸைஸ்வரி விற்பனை வரி உள்பட) பிரிட்டிஷ் சுத்தம் செய்யப்பட்ட சர்க்கரை (2 அந்தர்)	92-0-9
கான்பூர் (229 ரா.)	95-0-9
முதல்	96-0-0
சாமல் கோட்டை [illegible]	94-5-9

தேர்தல் முஸ்தீப்பு

கல்கத்தா - மலையாளிகள்

ஒரு ஜீப்; ஒரு மைக் தருகின்றனர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 10 லட்ச ரூபாய் தேர்தல் நிதி அறிவிக்கப்பட்டதுமே, நிதி சம்பந்தமாக தேச மெங்கிலுமிருந்தும் உற்சாகமான செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

கல்கத்தாவிலுள்ள மலையாள சகோதரர்கள் தேர்தல் நிதிக்குத் தங்களது பங்காக ஒரு ஜீப்பும், காரும் வாங்கித் தருவதென்று முடிவு செய்து, அதற்காக சுறுசுறுப்பாக வசூலில் இறங்கியுள்ளார்கள். இந்தத் தகவலை அண்மையில் கல்கத்தா சென்று திரும்பிய தோழர் நம்பூத்ரிபாட் வெளியிட்டுள்ளார். இன்னொரு மலையாள அன்பர் நிதி விவரத்தை 'நியூ ஏஜில்' படித்ததும், உடனே பூனாவிலிருந்து இது சம்பந்தமாக ஆவலோடு தகவல் கேட்டு எழுதியுள்ளார்.

வைனாட்டில் செண்டினல்ராக் எஸ்டேட் தொழிலாளர்கள் தேர்தல் நிதிக்குத் தங்களது 1 நாள் சம்பளத்தைத் தருவதென்று முடிவு செய்திருக்கும் மகிழ்ச்சிகரமான செய்தியை மலையாள தினசரி 'தேசாபிமானி' வெளியிட்டுள்ளது. இன்னும் நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சி அவர்களது வாழ்வுக்கும் வளத்திற்கும் ஈடுபாடில்லாத உறுதியோடு போராடும் கட்சியல்லவா?

ஆகவே மாகாணங்களில் போட்டி போட்டுக் கொண்டு வசூல் நடக்கிறது என்று அறிகிறோம். ஆனால் இது சம்பந்தமான 'ரிப்போர்ட்டுகள்' இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. இந்த 'ரிப்போர்ட்டுகளை' உடனுக்குடன் அனுப்பி வைத்தால் நிதி வசூல் இயக்கம்வலுவடைய உதவிகரமாக இருக்கும்.

எனவே, உடனே தேர்தல் நிதி வேலையில் இறங்குங்கள். வைனாட் தொழிலாளர்களின் உற்சாகமான வழியைப் பின்பற்றி உறுதியோடு செயலில் இறங்கி, நிதி லட்சியத்தை நிறைவேற்றுங்கள்.

பணவசூல் மட்டும் நமது குறிக்கோளல்ல. ரூபாய், அணா, பைசா என்று வசூல் செய்வதன் மூலம் நமது கொள்கை வெகுஜன, தேசபக்தப் பகுதிகளிலெல்லாம் போய் முழக்கம் செய்வதாக இருக்க வேண்டும்.

தங்கச் சுரங்கத்தில் கண்டன வேலைநிறுத்தம்

ராபர்ட்சன்பேட்டை, செப். 1—

சம்பளம், போனஸ் ஆகிய பிரச்னைகளில் சாம்பியன் ரீப் சுரங்கத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை தங்கச் சுரங்க நிர்வாகம் தட்டிக் கழித்து வருவதைக் கண்டிக்கும் பொருட்டு 3,000 சாம்பியன் ரீப் தொழிலாளர்கள் கண்டன வேலை நிறுத்தம் செய்தார்கள்.

தொழிலாளர்களுக்கு பிரிவு உபசாரம்

அடையார், செப். 1—

அடையார் எம். எஸ். ஐ. எம். பி. கூட்டுறவு மருந்து சொஸைட்டியில் பல வருடங்களாகப் பணியாற்றி வந்து தற்போது ஓய்வு பெற்றுக்கொள்ளும் திரு. மேஸ்திரி முனிசாமி, புண்ணியகோடி, வி. சின்னசாமி ஆகியவர்களுக்கு மேற்படி சொஸைட்டியில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் சார்பில் டாக்டர் ஒய். கொண்டல் ராவ் தலைமையில் நேற்று ஒரு பிரிவு உபச்சாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தினர் சார்பில் டாக்டர் எம். கே. வீரராகவன் ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தார். ஓய்வு பெற்றுக் கொள்ளும் தொழிலாளர்களைப் பாராட்டி மேற்படி சொஸைட்டி தொழிலாளர் சங்க காரியதரிசி ஆர். சங்கர நாராயணன் பேசினார்.

ம. பொ. சி. க்கு வரவேற்பு

சென்னை, செப். 2—

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம.பொ.சி. பர்மா சென்று இன்று சென்னை வந்துள்ளார். தனது அனுபவத்தைக் கூறுகையில் தமிழர்களிடையேயும் பர்மியர்களிடையேயும் அங்கு நல்ல உறவு நிலவுவதாகக் கூறினார். சென்னை ரங்கூன் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் போக வர விரும்பும்மக்களுக்கு பெரும்கஷ்டமேற்பட்டிருக்கிறது என்றும் பர்மாவிலுள்ள இந்தியர்கள் இந்த தேசத்திற்கு வந்துபோக பர்மிய அனுமதிச்சீட்டுப் பெறுவதில் மிகப்பெரும் கஷ்டமேற்படுகிறது என்றும் தெரிவித்தார்.

அங்குள்ள தமிழர்களுக்கு போதிய பள்ளிகள் இல்லாததால் தமிழ் சொல்லித்தரும் பள்ளிகள் ஆரம்பிக்க ஒரு கமிட்டி ஒன்றும் அங்கு அவர் அமைத்துவிட்டு வந்ததாகக் கூறினார்.

கல்வித் துறையில் பர்மியர்கள் மிகப்பெரிய முன்னேற்றமடைந்துள்ளதாகவும் ஆரம்பக் கல்வியிலிருந்து கலாசாலை வரையிலும் அங்கு கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது என்றும் கூறினர்.

சூளேஸ்வரம்பட்டியில் புதிய வாசகசாலை

பொள்ளாச்சி, செப். 28—

இவ்வூரையடுத்த சூளேஸ்வரம் பட்டியில் மக்கள் முற்போக்கு வாசகசாலை ஆரம்பவிழா தோழர் எம். தண்டபாணி தலைமையில் 27-8-56-ல் நடைபெற்றது.

இந்த மன்றம் அரசியல் பாகுபாடின்றி மக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்று தோழர்கள் ஏ. கே. கஸ்தூரி, எம். முத்துசாமி, எஸ். பி. ரங்கசாமி முதலியோர் பேசினார்கள்.

மன்றத்த[illegible] [illegible] தாரர்கள் எம். தண்டபாணி தலைவர், காரியதரிசியாக எஸ். பி. ரங்கசாமியும், பொருட்காப்பாளராக எஸ். ராமசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஷாப்புச் சட்டத்தை மீறியவருக்கு அபராதம்

ராமநாதபுரம், ஆக. 31—

ராமேஸ்வரம் பஞ்சாயத்து போர்டு மெம்பரும் பிரபல காங்கிரஸ்காரருமான திரு. ஆர். எஸ். நடராஜன் தனது கடையில் ஷாப்புச் சட்டவிதிகளுக்கு மீறி சிப்பந்திகளிடம் வேலை வாங்கியதாயும் மற்றும் பல ஷாப்புச் சட்ட விதிகளை மீறியதாயும் கண்டுபிடித்து ராமநாதபுரம்உதவி லேபர் இன்ஸ்பெக்டர் திரு. குருமூர்த்தி சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். அவ் வழக்கை விசாரித்த திரு. ரெங்காராவ் 10 ரூபாய் அபராதம் விதித்தார்.

இதே மாதிரி முன்னொரு தடவையும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார். (ந. கி.)

சத்தியமங்கலத்தில்

சத்தியமங்கலம், ஆக. 31—

சத்திய மங்கலத்திற்கு அருகில் உள்ள வேட்டுவன்புதூர் கிராம விவசாயிகள் சங்கத்தின் சார்பில் இன்று மாலை நடைபெற்ற விவசாயிகள் பொதுக்கூட்டத்திற்கு 25 சைக்கிள்களில் விவசாயிகள் பல கிராமங்களிலிருந்து ஊர்வலமாக வந்தனர். பெண்கள் உட்பட மொத்தம் 1500 விவசாயிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். திரு. பெருமாக் கவுண்டர் தலைமை வகித்தார். நியாயவார மசோதாவை சட்டமாக்க வேண்டிய அவசியம் பற்றி பல தோழர்கள் பேசினர். (ந. கி.)

பாலதண்டாயுதம் உண்ணாவிரதம்

சர்க்கார் தலையிட கோரிக்கை

அதிகாரிகளின் போக்குக்கு கண்டனம்

கோயமுத்தூர், செப். 1—

கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர் கூட்டம் கோவை பீளமேட்டில் தோழர் ஜி. நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

கோவை மத்திய சிறையில் தோழர் பாலதண்டாயுதம் சென்ற 27ம் தேதி முதல் உண்ணாவிரதம் இருந்துவருவதற்குக் காரணமான சிறை அதிகாரிகளின் ஜனநாயக மற்ற, தவறானப்போக்கைக் கண்டித்தும், சர்க்கார் உடனடியாக இதில் தலையிட்டு, பாலதண்டாயுதத்தின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அவரது உண்ணாவிரதம் நிற்க ஆவன செய்[illegible] வேண்டுமென்றும், நியாயம[illegible]ற முறையில் நடந்து கொ[illegible]ளும் சிறை அதிகாரிகள்மீது[illegible] நடவடிக்கை எடுக்கவேண்[illegible]டும் என்றும் கோரி ஒரு தீர்மா[illegible]னம் கூட்டத்தில் நிறைவேற்ற[illegible]ப்பட்டது.

மேலும், விலைவா[illegible]சி உயர்வைத் தடுக்கஉடனடி நட[illegible]வடிக்கைஎடுக்க வற்புறுத்தியும், [illegible]மொழிவழி மாகாணக் கிளர்ச்[illegible]களை சர்க்கார் இரக்கமற்று அ[illegible]டக்கி வருவதைக் கண்டித்தும், [illegible] சூயஸ் கால்வாயை நாஸர் தேசிய[illegible] உடமையாக்கியதை ஆதரித்தும் [illegible] தீர்மானங்கள் நிறைவேறின.

புயல் நி[illegible]வாரணத்தில் ஊ[illegible]ழல்

டெபுடி கலெக்டா[illegible]ம் பேட்டி

பட்டுக்கோட்டை, செப். 1—

புயல்நிவாரணக் கடன் தொகை விநியோகத்தில் ஏற்பட்டுள்ள ஊழல்களைப்பற்றி, தாலூகா கம்யூனிஸ்ட்கட்சி காரியதரிசி தோழர் மாசிலாமணி தலைமையில் ஒரு தூது கோஷ்டியினர் பட்டுக்கோட்டை டெபுடி கலெக்டரைப் பேட்டி கண்டு எடுத்துக்கூறினர்.

குளமங்கலம், கொத்தமங்கலம், பனங்குளம் முதலிய கிராம விவசாயிகளிடம் கடன் வாங்கித் தருவதாகச் சொல்லி லஞ்சம் வாங்கிய கி. மு. மீது நடவடிக்கை எடுக்கக் கோரினர்.

கலெக்டர் விஷயங்களைக் குறித்துக்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதாகத் தெரிகிறது. (ந. கி.)

தஞ்சையில் மீண்டும் நெல் விலை உயர்வு!

ஒரு மூட்டை ரூ. 20-12-0

தஞ்சை, செப். 1—

தஞ்சை நகரில் நெல் விலை மறுபடியும் ஏற ஆரம்பித்துவிட்டது. இன்று 48 படி கொண்ட நெல் மூட்டை ஒன்று ரூ. 20-12-0 ஆக விற்கப்படுகிறது. பச்சரிசி பட்டணம் படி ரூ. 1 ஆகவும், புழுங்கல் அரிசி 0-14-6 அணாவாகவும் விற்கப்படுகிறது. மேற் கொண்டும் விலை உயரும் என்று வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இரங்கற் கூட்டம்

சூரன்குடி, ஆக. 31—

சூரன்குடி வாலிபர் சங்கத் தந்தையும், முன்னாள் சென்னை ஒய். எம். சி. ஏ. பொதுச் செயலாளருமான திரு. சாலமன், எம். ஏ. அவர்களின் குமாரர் இஞ்சினீயர் எல். டி. சாலமன் அண்மையில் சென்னையில் அகால மரணமடைந்ததற்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து இன்று நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

ராஜ்யங்களில் நடப்பது நாமறியவில்லையே

ஆஸாத் கவலை

புதுடில்லி, செப். 2—

கல்வியைப் பரப்புவதற்காக சர்க்கார் கையாண்டுவரும் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றால் மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்குமிடையே அதிகமான கூட்டுறவு அவசியம் என்று ராஜ்யக் கல்வி மந்திரிகள் மகாநாட்டில் பேசும்பொழுது யூனியன் கல்வி மந்திரி மௌலானா ஆஸாத் கூறினார்.

ராஜ்யங்களில் என்ன நடக்கிறதென்பது எங்களுக்குத் தெரியாது. அவ்வாறிருக்க ஒரு பூரணமான திட்டத்தை எப்படி வகுக்க முடியும் என்று கேட்டார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் கல்விக்காக ரூ. 1080 கோடி ஒதுக்கப்படும் என்று ஆலோசனை வைக்கப்பட்டது. ஆனால் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 308 கோடியே என்றார் அவர். இந்தத் தொகையில் ரூ. 212 கோடி ராஜ்யங்களுக்கு ஒதுக்கப்படும் என்றார்.

கைத்தொழில் கேந்திரங்கள் சென்னைக்கு மேலும் ஏழு

புதுடெல்லி, செப். 2—

சென்னை ராஜ்யத்திற்கு மேலும் ஏழு கைத் தொழில் பயிற்சி-உற்பத்திக் கேந்திரங்கள் ஸ்தாபிக்கப்படும் என்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. இதற்காக 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மான்யம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழில் அமைப்புகளில் பிரம்பு வேலைத் தொழிற்சாலை வேலூரிலும் காஸர்கோடிலும் நிறுவப்படும். பாளையங்கோட்டையில் சரிகை வேலைத் தொழிற்சாலையும், கோவையில் எம்ப்ராய்டரி தொழிற்சாலை, ஈரோடில் மரப்பொம்மைகள் செய்யும் தொழிற்சாலை, ராஜபாளையத்தில் சாய அச்சுத் தொழிற்சாலை, மானா[illegible]மதுரையில் மண்பாண்டத் தொ[illegible]ழிற்சாலை இ[illegible] படும் எனத் தெரிகிறது.

சென்னை மைசூர் இரு ராஜ்யங்களும் சேர்ந்து நடத்தவிருக்கும் கம்பளித் தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றுக்கு 4 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மத்திய சர்க்கார் மான்யம் அளித்திருக்கிறது.

கிராமங்கள் முன்னேறுவிட்டால்

திட்டங்களால் பயனில்லை

ஜனாதிபதி கூறுகிறார்

புதுடில்லி, செப். 2—

அலிப்பூரில் கிராம மாதர் முன்னேற்றம்பற்றிய விவாத அரங்கை ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் பேசினார்:

'நமது நாட்டில் முக்கால் பகுதியினர் கிராமங்களில் வசிக்கிறார்கள். அவர்களே நாட்டின் உண்மையான பிரதிநிதிகள். அவர்களது சுகதுக்கங்கள்தான் நாட்டின் சுகதுக்கங்களாகும். கிராம மக்களுக்குப் பயன்படாத திட்டங்களை, வெற்றி பெற்ற திட்டங்களாகக் கூறமுடியாது. வாழ்க்கைத்தரத்திலும், கல்வியிலும் அபிவிருத்தி ஏற்பட விசேஷ கவனம் செலுத்தாவிட்டால், நவ இந்தியா நிர்மாண முயற்சிகள் யாவும் பூர்த்தியற்றவையாகவும் ஒருதலைப்பட்சமானதாகவும் இருக்கும்" என்றார்.

சாகுபடிதாரர் (திருத்த) மசோதா

செலக்ட் கமிட்டி

சென்னை, செப். 1—

சென்னை சாகுபடிதாரர், குத்தகைதாரர் (திருத்த) [illegible] சம்பந்தமான [illegible] செப்டம்ப[illegible] மணிக்கு [illegible] காரியாலயத்[illegible]

ராஜ்ய சபை

செயற்கை அரிசி செய்யும் தொழிற்சாலை

புதுடில்லி, ஆக. 28—

செயற்கை அரிசி தயாரிப்பதற்காக $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவு மதிப்பில் ஒரு சிறிய பரீட்சார்த்த-நிதர்சனக் காட்சி யந்திரம் வெளிநாட்டிலிருந்து சமீபத்தில் வரவழைக்கப்பட்டிருக்கிறதென்றும், அது இப்போது மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறதென்றும். இன்று ராஜ்ய சபாவில் இயற்கை வள-விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரியின் சார்பில் ஒரு கேள்விக்குப் பதிலளித்த ஸ்ரீ கே. எல். மாலி தெரிவித்தார்.

ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம்

1955-56ம் ஆண்டில் வேலை முன்னேற்றம் திருப்திகரம்

புது டில்லி, ஆக. 28—

விசாகப்பட்டணத்தில் உள்ள ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தளத்தில், 1955-56ம் வருஷ, உற்பத்தி, அதற்கு முந்திய வருஷத்தைக் காட்டிலும் சுமார் 17 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. முந்திய வருஷத்தில் மொத்தம் 2,10,84,000 ரூபாய் பெறுமானமுள்ள வேலை நடைபெற்றிருக்க, பரிசீலனை வருஷத்தில் மொத்தம் 2,46,07,000 ரூபாய் மதிப்புக்கு வேலை நடைபெற்றிருக்கிறது. பரிசீலனை வருஷத்தில் சகல முனைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது. இவ் வருஷத்தில், இரண்டு நவீன ரக டீசல் யந்திரக் கப்பல்கள் பூர்த்தியாகி டெலிவரி செய்யப்பட்டன. இந்த வரிசையில் மூன்றாவது கப்பலும் இவ்வருஷ இறுதியில் தயாராகி மிற்பாடு டெலிவரி செய்யப்[illegible]பட்டுவிட்டது.

இந்திய-வியத்நாம் ரேடியோ-தந்தி இணைப்பு

புதுடில்லி, செப். 2—

இந்தியாவிற்கும், வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்குமிடையே இன்று நேரடியான ரேடியோ-தந்திப் போக்குவரத்து துவக்கிவைக்கப்பட்டது.

இன்றுதான் வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் தேசிய விடுதலை நாள். இந்தப் புது ஏற்பாட்டின்மூலம் இரு நாடுகளுக்குமிடையே தந்திகள் வெகு சீக்கிரத்தில் போய்ச் சேரும்.

புதுடில்லியிலிருந்து செய்திப் போக்குவரத்து மந்திரி ஜகஜீவன் ராமும், ஹனோயிலிருந்து வியத்நாம் சர்க்கார் செய்திப்போக்குவரத்து மந்திரியும் ரேடியோ தந்தி இணைப்பைத் துவக்கி பரஸ்பரம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

சோஷலிஸ்ட் ஊழியர்களுக்கு தண்டனை

காரைக்குடி, ஆக. 31—

26-7-56-ல் ராஜ்ய முதலமைச்சர் காமராஜர் திருப்புவனம், சிவகெங்கை பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது தங்களின் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்காக கொடிகள், பதாகைகள் முதலியவற்றுடன் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்ததற்காக, 45 சோஷலிஸ்ட் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு நேற்று சிவகெங்கை ஜூடிஷியல் சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டதில் 40 தொண்டர்கள் இ. பி. கோ. செக்ஷன் 290 படி குற்றவாளிகளெனத் தீர்மா[illegible] தலா ரூ. 2 அபராதம் [illegible]ர். ஆனால்தொண்[illegible]ம் கட்ட[illegible] சிறை தண்[illegible]ர். (ந.கி.)

அமெரிக்க நகரில்

நிற வெறியர்களின் மிருகத்தனம்

கிளின்டன், செப். 2—

வெள்ளையர் பள்ளிக்கூடங்களில் நீக்ரோ குழந்தைகளை அனுமதிப்பதை எதிர்த்து இன்று அமெரிக்க நிறவெறியர்கள் கிளின்டன் நகரில் பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தக் கூட்டத்தினர் கட்டுக்கடங்காது போய், பலமுறை கெட்டசெயல்களில் ஈடுபட்டனர். இவர்களைக் கலைப்பதற்காக பலமுறை கண்ணீர்ப் புகை குண்டுகள் உபயோகப் படுத்தப்பட்டன. மணிக்கு மணி ஆபத்தாகி வந்த நெருக்கடியான நிலைமை ஸ்தல போலீஸார் சமாளிக்க முடியாத நிலையில் ராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது. நகரில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

சோவியத் - ஜப்பான் பேச்சுவார்த்தை

சோஷலிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

பிகிங், ஆக. 30—

இன்றுள்ள பொதுவான சூழ்நிலையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, சோவியத் ஜப்பானிய பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஜப்பானிய சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாகக் கமிட்டி வலியுறுத்தியிருக்கிறது. பேச்சு வார்த்தைகள் முறிந்தால் பெரும் விபரீதம் என்று எச்சரித்திருக்கிறது.

குடம் தண்ணீர் அரையணு

நாமக்கல்லில் தண்ணீர்ப் பஞ்சம்

நாமக்கல், செப். 1—

தண்ணீர்ப் பஞ்சத்தால் திண்டாடும் நாமக்கல் நகர மக்களுக்கு லாரிகள் மூலம் மோகனூரிலிருந்து கொண்டுவந்து சப்ளை செய்யப்பட்டுவந்த தண்ணீர் குடம் காலணாவிலிருந்து, இன்று முதல் அரையணுவுக்கு விற்கப்படுகிறது. (ந.நி)

நியாய வார மசோதாவை சட்ட மாக்குக

மணப்பாறை, ஆ[illegible]—

பின்னத்தூர் விவ[illegible]சாயிகள் சங்கத் திறப்பு [illegible]ழா வ. பொன்னுச்சாமி [illegible]வுண்டர் தலைமையில் 30-[illegible]-56 ந் தேதியன்று நடைபெற்றது.

நியாய வார மசோதாவை சட்ட மாக்கவும், நிலச் சீர்திருத்தக் குழுவின் சிபார்சுகளை அமுல் நடத்தவும், நில வெளியேற்றத் தடை சட்டத்தை நீடிக்கவும் கோரி தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. (ந. நி.)

உப்பு வண்டியை மறிக்காதே!

பொதுப்பாதை கோரி ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி, செப். 1—

இவ்வூரை அடுத்த முத்தையாபுரம் உப்பு உற்பத்தியாளர்கள் சுமார் 200 பேர்களும், வண்டித் தொழிலாளர்கள் சுமார் 60 பேர் வண்டிகளுடனும் முத்தையபுரத்திலிருந்து சுமார் 5 மைல் ஊர்வலமாக வந்து தூத்துக்குடி சப் கலெக்டரைப் பேட்டி கண்டார்கள். ஊர்வலத்தினரை ஊர் எல்லையில் உப்புத் தொழிலாளர் சங்க உபகாரியதரிசி தோழர் டி.கே. சுவாமிதாஸ் மாலை அணிவித்து வரவேற்றார். ஊர்வலத்தை தோழர்கள் பி. ஐசக், டி. கே. சுவாமிதாஸ் இருவரும் தலைமை தாங்கிச் சென்றனர். ஊர்வலத்தில் 'பொதுப்பாதை வேண்டும், உப்பு வண்டியை மறிக்காதே' என்ற கோஷத்துடன் வந்தார்கள். ஊர்வலத்தினர்கள் சார்பில் ஒரு மகஜர் சப் கலெக்டரிடம் கொடுக்கப்பட்டது. சப்கலெக்டர் மகஜரைப் பெற்றுக்கொண்டு உப்பு வண்டியை தடுக்காமல் இருக்க [illegible] வடிக்கை எடுப்ப[illegible]

16 அவுன்ஸ் அரிசி கேள்விக்கு

தோழர் ஜீவா பதில்

சென்னை, செப். 1—

"ஜீவாவை சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்தீர்களே, 16 அவுன்ஸ் அரிசி கிடைத்துவிட்டதா என்று சிலர் கேட்கிறார்களாம். அப்படிக் கேட்பதே தவறு. தேர்தல் கூட்டத்தில் நான் பேசுகையில், எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் 16 அவுன்ஸ் அரிசி தருவோம் என்றுதான் சொன்னேனே தவிர, என்னைத் தேர்ந்தெடுத்தால் நான் தருவேன் என்று சொன்னதே இல்லை. நானே அன்னக் காவடியாச்சே! நான் எங்கிருந்து கொடுப்பேன்? ஆட்சிப் பொறுப்பில் நாங்கள் இல்லாததால், காங்கிரஸே ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால் போதுமான அரிசி, நியாயமான விலைக்கு காங்கிரஸ் சர்க்கார்தான் கொடுக்கவேண்டும். ஆனால் டி.யு.சி.எஸ். கடைகளில் [illegible]ரிசி சப்ளை செய்யவில்லை. வெளிக்கடை[illegible]களில் படி ரூ. 1 கொடுத்துத்தான் வாங்கவேண்டியிருக்கிறது" என்[illegible]று ராயபுரம் 3வது வட்ட மக்கள் முன்னேற்ற மன்ற 5வது ஆண்டு விழா 1—9—56ல் நடைபெற்றபோது வடசென்னை எம். எல். ஏ. ஜீவா[illegible]னந்தம் குறிப்பிட்டார். விழாவுக்கு திரு. ஆர். கன்னியப்பன் தலைமைவகித்தார். திரு. க. கணேசன் எம். சி., ஐ. மாயாண்டி பாரதி, கே. முருகேசன் ஆகியோர் பேசினார்கள்.

டெலிபோன் வசதி, அரசியல் கைதிகள் விடுதலை, எகிப்துக்கு ஆதரவு மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

புதுவருடத்துக்கு எஸ்.டி. ராதா தலைவர், ஆறுமுகம், ஆர். கன்னியப்பன் உபதலைவர்கள், வரதன் பொதுக்காரியதரிசி, வீரபத்திரன் பாண்டியன் உதவிக் காரியதரிசிகள், பொருளாளர் ரதிபிரியன் மற்றும் 7 பேர் நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

[illegible]யாவுக்கு காப்பி [illegible]யல ஏற்றுமதி

புதுடில்லி, ஆக. 28—

இந்தியாவிலிருந்து 1956 ஏப்ரல் மே மாதங்களில் 500 டன் காப்பி ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்று, வர்த்தக-தொழிலியல் மந்திரி, ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இன்று லோக சபாவில் தெரிவித்தார்.

இவ்வருஷம் ஏப்ரல் ஆரம்பத்திலிருந்து ஜூலை 7ந் தேதி வரையில் கல்கத்தாவிலிருந்து ரஷ்யாவுக்கு 3,31,284 பவுண்ட் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதென்றார்.

பாடுபடும் விவசாயிகள் திடீரெனக் கைது!

குணசீலம், செப். 2—

சென்ற வருடம் கையேர் வாரத்திற்கு ஆமூரில் மருதவீரன் மாதவன் என்னும் விவசாயிகள் உழுத நிலத்தை சட்டப்படி இவ்வருடமும் உழுதனர். திடீரென்று 20-8-56ல் வாய்தலை போலீஸார் மேற்படி விவசாயிகளை ஸ்பெஷல் லோன் தாசில்தார் கே. எம். சுப்ரமண்யம் எம்.ஏ. அவர்களின் உத்தரவு என்று கூறி கைதுசெய்து ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்று புரியவே இல்லை. —ந. நி.

இலவச வைத்திய உதவி

திருநீர்மலை, செப். 1—

தமிழ்நாடு ஹோமியோபதி வைத்திய சங்கம் திருநீர்மலை கிராமத்தில் இலவச வைத்திய உதவி செய்தது. டாக்டர்கள் என். சிவானந்தம், பி.கே. சேகரன், எம்.வரதராஜன், ஏ. ஜே. சந்திரன், எஸ். செல்வராஜ் ஆகியோர் சென்னையிலிருந்து அங்கு சென்று 110 வியாதியஸ்தர்களுக்கு இலவச [illegible] ஹோமியோபதி வைத்திய[illegible]ர்.

நஷ்டஈடு ரூ. 30 தானு?

கன்னியப்ப நகர் வாசிகள் கிளர்ச்சி

சென்னை, ஆக. 31—

இரும்பு வாராவதிக்கருகில் உள்ள கன்னியப்ப நகரில் உள்ள மக்களை தண்டையார் பேட்டையிலுள்ள மனையில் குடியேற வேண்டும் என்று சர்க்கார் வற்புறுத்தி வருகிறது. குடிசைக்கு ரூ. 30 தான் நஷ்டஈடு தருவதாக தெரிகிறது. இது போதாது என்றும், குறைந்தபட்சம் ரூ. 100 கொடுக்கப்பட வேண்டும் என்றும் இந் நகரவாசிகள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். (ந. நி.)

மதுரை நகரசுத்தி தொழிலாளர் மும்முரம்

மதுரை, செப். 2—

தமிழ்நாடு நகரசுத்தி தொழிலாளர்களின் 22 கோரிக்கைகளுக்கும், சென்னை சர்க்கார் கவனிக்க மறுத்துவிட்டதால் செப்டம்பர் 26ம் தேதியன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வதென மதுரை நகரசுத்தி தொழிலாளர் சங்கம் 25-8-56ல் முன்னறிவிப்பு நோட்டீஸ் கொடுத்து விட்டது. வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்த தீவிர ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். (ந. நி.)

3-வது ஷிப்ட் வந்தால்...

பி. அண்டு சி. தொழிலாளர் எச்சரிக்கை

சென்னை, செப். 3—

பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் தொழிலாளரின் மாபெரும் பொதுக்கூட்டம் 2-9-56-ல் கான்ரான்ஸ் மித் நகர் மைதானத்தில் [illegible]டைபெற்றது. 5000 தொழில[illegible]ளர்கள் வந்திருந்தார்கள்.

ம[illegible]ராஸ் லேபர் யூனியன் தலைவர், [illegible]எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை [illegible] பேசுகையில், "லேபர் இலாகா[illegible]யும் பாக்டரி இன்ஸ்பெக்டரைய[illegible]ம் கலந்து ஆலோசிக்காமல், யதே[illegible]ச்சாதிகாரமாக மில் நிர்வாகம் 3-[illegible]து ஷிப்ட் முறையைக் கொண்டு[illegible] வருகிறது. இது 1955-ம் வருடத்[illegible]திய 58 வது விதியின்படி தவறான[illegible]து. ஆகையால் 3-9-56 முதல் பு[illegible]த்தப்படுவதாக இருந்த 3-வது ஷிப[illegible]டை தற்காலீகமாக ஒத்திவை[illegible]வக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் [illegible] அதிகாரிகளின் அனுமதியின் [illegible]பரில் மீண்டும் கொண்டுவரப்ப[illegible]டலாம். 3-வது ஷிப்ட் வராது [illegible] என்று அதிகாரிகள் உத்திரவா[illegible]தம் தர வேண்டும். இல்லையேல் மீண்டும் வேலை நிறுத்தம் ஏற்படும்" என்று எச்சரித்தார்.

தீர்மானம்

எந்த டிபார்ட்மெண்டிலும் 3-வது ஷிப்ட் முறையைக் கொண்டுவரக் கூடாது. கொண்டு வந்தால் 16-9-56 முதல் வேலை நிறுத்தம் செய்வோம் என்று மில் நிர்வாகத்துக்கு நோட்டீஸ் கொடுப்பதென முடிவாகியது.

முனிசிபல் தொழிலாளர் கலெக்டருடன் பேட்டி

கோவை, ஆக. 30—

கோவை முனிசிபல் தொழிலாளர்கள் 450 பேர், சங்கத் தலைவர் ரங்கசாமி, எம். சி., காரியதரிசி என். மருதாசலம் எம். சி. ஆகியோர் தலைமையில் 29-8-56 மாலையில் கோரிக்கை கோஷங்களை முழக்கிக்கொண்டு ஊர்வலமாகச் சென்று ஜில்லா கலெக்டர் அவர்களிடம் மகஜர் கொடுத்தார்கள்.

தொழிலாளர் வசிக்குமிடங்களில் நியாயவிலைக் கடைகளைத் திறக்கவேண்டுமென்றும், சகலருக்கும் காக்கி உடை தரவேண்டுமென்றும், அடிப்படைச் சம்பளம் ரூ. 30-ம், பஞ்சப்படி ரூ. 25-ம் வீட்டு வாடகை ரூ. 7-ம் ஆக 62 ரூபாய் சம்பளம் தரவேண்டுமென்றும், குறைந்த ஆட்களை வைத்து அதிக வேலை வாங்கக் கூடாதென்றும் அதில் கோரியிருந்தார்[illegible]. [illegible] கவனிப்பதாக கலெக்டர் [illegible] (ந. நி.)

சென்னை சட்டசபை செப். 27ல் கூடும்

சென்னை, செப். 3—

சென்னை சட்ட சபை செப்டம்பர் 21ந் தேதி காலை 11 மணிக்குக் கூடும். இந்தக் கூட்டத்தொடர் ஒரு வாரத்திற்கு இருக்கும் என்று தெரிகிறது. சென்னை மேல் சபை (கவுன்சில்) செப். 24ந் தேதி காலை 11 மணிக்கு ஆரம்பமாகும்.

விவசாயிகளை வெளியேற்றி சவுக்கைப் பயிர்செய்வதா?

விவசாயிகள் சங்கக் காரியதரிசி கண்டனம்

மேற்கு தாம்பரம், செப். 3—

செங்கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம், பொன்னேரி, சைதாப்பேட்டை, ஸ்ரீ பெரும்புதூர், திருவள்ளூர் ஆகிய தாலூக்காக்களில் நிலப்பிரபுக்களும், மிராசுதார்களும் நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தையே மீறி வருகிறார்கள்.

விவசாயிகளை நஞ்சை நிலங்களைவிட்டு வெளியேற்றி, தாங்களும் சாகுபடி செய்யாமல், அந்நிலங்களில் சவுக்கு மரங்களை வைத்தும், கரம்பாகப் போட்டும், உணவுற்பத்தியைப் பெரிதும் தடைப்படுத்தி வருகிறார்கள்.

இதைக் கண்டித்து, செங்கற்பட்டு ஜில்லா விவசாயிகள் சங்கக் காரியதரிசி திரு. சி. கே. மாணிக்கம், ஒரு அறிக்கை விடுத்துள்ளார். (ந. நி.)

சீனு-பர்மா எல்லைத் தகராறு நியாயமாக தீரும்

யூநூ நம்பிக்கை

ரங்கூன், ஆக. 29—

சீன பர்மிய எல்லைப் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளும் வகையில் இரு நாடுகளுக்குமிடையே நல்லெண்ணம் நிச்சயமாக இருக்கிறது என்று முன்னுள் பர்மியப் பிரதமரும், பாஸிஸ எதிர்ப்பு சுதந்திர லீக் தலைவருமான யூ நூ கூறினார்.

எல்லை விஷயங்களில் மட்டுமன்றி பண்டமாற்று வர்த்தக உறவிலும் சீனு-பர்மாவுக்கு விசேஷ சலுகை காட்டியிருக்கிறதென்றார். இரண்டு லட்சம் டன் பர்மா அரிசி கெட்டுப்போயிருந்தும் சீனு முழுவதையும் வாங்கிக் கொண்டது பேருபகாரமான ஒரு செயல் என்றார்.

உள்நாட்டுத் தகராறுக்கு முடிவு காணுக

ரங்கூன், ஆக. 30—

உள்நாட்டில் தகராறுகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை இங்கு கூடிய பர்மிய நாட்டு எதிர்க் கட்சியான—தேசிய ஐக்கிய முன்னணியின் மகாநாடு வெளியிட்டது. இதன் தலைவரும் பர்மிய விடுதலை இயக்கத் தலைவரான ஆங்சானின்சகோதரருமான ஆங்தான் உள்நாட்டில் அமைதியை மக்கள் விரும்புகிறார்கள் என்று கூறினார். தேசிய ஐக்கியம், தேசிய அரசுரிமையைப் பாதுகாப்பது இவற்றையும் வலியுறுத்திக் கூறுகிறார்.

போரை நிறுத்தும்படி மலாய மக்கள் கட்சி பத்திரிகை

சிங்கப்பூர், செப். 2—

மலாயாவில் போர்நிறுத்தம் செய்து கம்யூனிஸ்டுகளுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி மலாயா மக்கள் கட்சியின் பத்திரிகையான 'ஏக்ஷன்' எழுதியிருக்கிறது.

காலனியாதிக்கத்தின் விளைவாகவே மலாயா போர் மூண்டதென்றும் காலனி சர்க்கார் இதற்காக 240 கோடி டாலர் செலவழித்திருக்கிறதென்றும், மலாயா கம்யூனிஸ்ட் கட்சி கௌரவமான சமரசத்தை விரும்புகிறதென்றும் அப்பத்திரிகை எழுதுகிறது.

பிராவிடெண்டு பண்டு கமிட்டியின் முடிவுகள்

சென்னை, செப். 3—

இன்று பிராவிடெண்ட் பண்டுக் கமிட்டி கூட்டம் சி. ஜி. ரெட்டி தலைமையில் சர்க்கார் காரியாலயத்தில் நடைபெற்றது. சர்க்கார் மெம்பர்களான பாலசுந்தரம், சேஷாத்ரி, சுப்புசாமியும் தொழிலாளர் மெம்பர்களான கே. டி. கே. தங்கமணி, எஸ். ஸி. ஸி. அந்தோணிப் பிள்ளை, ஜி. ராமானுஜமும் பங்கெடுத்தனர். முதலாளி அங்கத்தினர்களான துரைசாமி, ராமகிருஷ்ண, ஆண்டுருவில் யாரும் வரவில்லை.

பல முக்யமான விஷயங்கள் பற்றி விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது. பிராவிடெண்ட் பண்டு திட்டம் தமிழில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இலவசமாக கொடுக்க முடிவு செய்யப்பட்டது. சில முதலாளிகள் இன்றும் பல தொழிலாளர்களை திட்டத்தின்கீழ் கொண்டுவராமல் சாக்குப்போக்கு சொல்வது சுட்டிகாட்டப்பட்டது. இன்று ரூபாயுக்கு 1 அணு பிடிக்கப்படுகிறது. அதை $1\frac{1}{4}$ அணுவாக உயர்த்தலாம் என சிபார்சு செய்யப்பட்டது. இதன் மூலம் வருடத்தில் சர்க்கார் உபயோகிக்க 5 கோடி ரூபாய் அதிகம் கிடைக்கும். சர்க்காரின் கட்டடத் திட்டப்படி $12\frac{1}{2}$% தொழிலாளர் கொடுக்க வேண்டியுள்ளது. மேற்படி தொகையை பண்டிலிருந்து கிடைக்கும்படி சிபாரிசு செய்யப்பட்டது. பஞ்சாலைகளில் கமிஷன் பணமும் சேர்த்துப் பிடிப்பதுதான் சரியென சுட்டிக்காட்டப்பட்டது. இது சம்பந்தமாக பிராவிடண்ட்பண்டு கமிஷனர் முதலாளிகளைச் சந்திப்பார். புதிதாக சேர்க்கப்பட்டிருக்கும் 14 தொழில்களில் முறையாக நடப்பதை உத்தரவாதம் செய்ய அங்கத்தினர்கள் ஒத்துக்கொண்டார்கள். சர்க்கார், ஸ்தல ஸ்தாபன தொழிற்சாலைகளுக்கு இன்று கிடைத்துள்ள விதிவிலக்கு ரத்து செய்ய வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டது. அடுத்த கூட்டம் ஜனவரியில் நடக்கும். (ந. நி.)

மாணவர் கிளர்ச்சி

தேபர் ஊர்வலம் கைவிடப்பட்டது

இந்தூர், செப். 2—

நேற்று மாலை மத்திய பாரத் காங்கிரஸ் மகாநாடு ஒன்றுக்குத் தலைமை வகிக்க, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தேபர் இங்கு வந்தபோது, கடைகள் பூர்ண ஹர்த்தால் அனுஷ்டித்தன.

ஸ்தல இண்டர்மீடியட் கல்லூரியை முதல் கிரேடு கல்லூரியாக உயர்த்தக் கோரி மாணவர்கள் செய்துவரும் கிளர்ச்சிக்கு ஆதரவாகவே இந்த ஹர்த்தால் நடைபெற்றது. இதை முன்னிட்டு, ஸ்ரீ தேபரை ஊர்வலமாக அழைத்துச் செல்லும் முயற்சி கைவிடப்பட்டது.

Regd. [illegible] [illegible]y S. KRISHNASWAMY, at Janasakthi Press. (Phone 2241) 32, Broadway, Madras-1.
Editor: P. JEEVANANDAM

REGISTERED AS A NEWS PAPER IN CEYLON